திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி திருவேற்காடு நகராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களின் பெறப்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொண்ட பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி, உடன் அனைத்துஅரசு துறை அதிகாரிகள் திமுக மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் நகரக் கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மஞ்சள், பவானி ஜமுக்காளத்தை புறக்கணிக்கும் ஒன்றிய அரசு!

தேசிய மஞ்சள் வாரியத்தில் ஈரோடு விவசாயிகளுக்கு வஞ்சகம்!

நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.20-

ஈரோடு மஞ்சள், பவானி ஜமுக்காளத்தை புறக்கணிக்கும் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு மெத்தனப் பதில்கள் வந்துள்ளது எனவும், தேசிய மஞ்சள் வாரியத்தில் ஈரோடு விவசாயிகளின் குரலுக்கு இடம் கொடுக்காமல் வஞ்சகம் செய்கிறது ஒன்றிய அரசு எனவும் ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது குற்றச்சாட்டு வருமாறு:-

இந்திய கைவினைப் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களை உலக அரங்கில் முன்னெடுத்துச் செல்வதாக பேசும் ஒன்றிய அரசு, தமிழ்நாட்டின் தனித்துவமான ஈரோடு மஞ்சள் மற்றும் பவானி ஜமுக்காளம் உள்ளிட்ட பொருட்களை மட்டும் அக்கறையில்லாமல் அணுகிக் கொண்டிருக்கிறது. இது என் தொகுதி மக்களின் வாழ்வாதாரத்தின் மீது ஒன்றிய அரசு நடத்தும் ஒரு போரென்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்று நாடாளுமன்றத்தில், உலகப் புகழ்பெற்ற ஈரோடு மஞ்சள் மற்றும் பவானி ஜமுக்காளத்தின்

ஏற்றுமதி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த விவரங்களை ஒன்றிய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்திடம் கேட்டேன். ஆனால், கிடைத்த பதில்கள் அதிர்ச்சியளிப்பதாகவும், பெருத்த ஏமாற்றமளிப்பதாகவும் அமைந்துள்ளன.

தனிப்பட்ட தரவுகள் இல்லாத பொதுவான புள்ளி விவரங்கள்

நான் கேட்டது ஈரோடு மஞ்சளின் தனிப்பட்ட ஏற்றுமதி விவரங்கள். ஆனால், அமைச்சர் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் மஞ்சள் ஏற்றுமதி புள்ளிவிவரங்களைக் கொடுத்துள்ளார். ஈரோடு மஞ்சள் புவிசார் குறியீடு (GI) பெற்று, சர்வதேச சந்தையில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. ஆனால், அதன் தனித்துவத்தை மறைத்து மொத்த தமிழ்நாட்டு புள்ளி விவரங்களுடன் கலந்து, ஈரோட்டு விவசாயிகளின் உழைப்பை குறைவுபடுத்தும் செயலைச் செய்கிறது ஒன்றிய அரசு.

இதே நிலைதான் பவானி ஜமுக்காளத்திற்கும். அதன் பாரம்பரியமான கைத்தறி நெசவுத் திறனையும், புவிசார் குறியீட்டையும் கண்டு கொள்ளாமல், ஒட்டு மொத்த ஜவுளி ஏற்றுமதியுடன் சேர்த்துப் பேசுவது, பவானி நெசவாளர்களின் உழைப்பை அவமானப்படுத்தும் செயல்.

வாரியம் எனும் பெயரில் வஞ்சகம்; தமிழ்நாட்டுக்கு மறுக்கப்படும் பிரதிநிதித்துவம்

மஞ்சள் ஏற்றுமதியை மேம்படுத்த 'தேசிய மஞ்சள் வாரியம்' அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் பெருமையாக பதிலில் சொல்லியிருக்கிறார். வாரியம் வரவேற்கத்தக்கதே. ஆனால், 'மஞ்சள் மாநகரம்' என்று அழைக்கப்படும் ஈரோடு உட்பட, ஒட்டு மொத்த தமிழ்நாட்டிற்கும் இந்த வாரியத்தில் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டிருப்பது ஏன்?

இந்தியாவில் இதுவரை வெறும் 6 வகை மஞ்சள்களுக்கு மட்டுமே புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டின் ஈரோடு மஞ்சள் புவிசார் குறியீடு பெற்றுள்ளது. இந்தியாவின் மொத்த மஞ்சள் ஏற்றுமதியில் கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பங்கு 9 - 12 %

இத்தனை முக்கியத்துவம் இருந்தும், தமிழ்நாட்டிற்கு மட்டும் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டு வருகிறது. மஞ்சள் மாநகரத்தின் பிரதிநிதியாக கேட்கிறேன், ஈரோட்டு விவசாயிகளின் குரலுக்கு இந்த வாரியத்தில் இடமில்லை என்றால், இந்த வாரியம் யாருக்காகச் செயல்படுகிறது? இது வெறும் பெயரளவிலான வாரியமா அல்லது வேறு மாநிலங்களின் நலனுக்காக மட்டுமானதா?

தொடர்ந்து குரல் கொடுப்பேன்

ஈரோடு மஞ்சள் மற்றும் பவானி ஜமுக்காளத்தின் தனிப்பட்ட முக்கியத்துவத்தை ஒன்றிய அரசு உடனடியாக அங்கீகரிக்க வேண்டும். அவற்றின் ஏற்றுமதி மற்றும் சர்வதேச சந்தைப்படுத்துதலுக்கு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மிக முக்கியமாக, தேசிய மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும்.

இவை நடக்கும் வரை என் குரல் தொடர்ந்து ஒலிக்கும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசு இளம் கலைஞர்களுக்கான உதவித்தொகை

தகுதி அளவுகோல்கள் குறித்து தெரிவிக்க விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தியுள்ளதா?

மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 20-

இளம் கலைஞர்களுக்கான உதவித் தொகை பெறுவதற்கான தகுதி அளவுகோல்கள் குறித்து ஒன்றிய அரசு விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்தியுள்ளதா என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்விகள் வருமாறு:

அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு கலாச்சாரத் துறைகளில் 'இளம் கலைஞர்களுக்கான உதவித்தொகை' (SYA) திட்டத்தின் கீழ் பயனடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் கலைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) தமிழ்நாட்டைச் சேர்ந்த கலைஞர்களுக்கு SYA திட்டத்தின் கீழ் உதவித் தொகை சரியான நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு அரசிடம் கண்காணிப்பு வழிமுறை உள்ளதா;

ஆறு மாத முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்காததால், தமிழ்நாட்டைச் சேர்ந்த உதவித்தொகை தாமதமான அறிஞர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கான காரணங்கள் என்ன?

(ஈ) இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் செயல்முறை மற்றும் தகுதி அளவுகோல்கள் குறித்து இளம் கலைஞர்களுக்குத் தெரிவிக்க, தமிழ்நாட்டில் அரசு ஏதேனும் விழிப்புணர்வு அல்லது சமூகப் பிரச்சாரங்களை நடத்தியுள்ளதா?

(உ) தமிழ்நாட்டைச் சேர்ந்த கலைஞர்களுக்கான விண்ணப்பம் மற்றும் அறிக்கையிடல் செயல்முறையை டிஜிட்டல் மயமாக்கவும் எளிமைப்படுத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், (குறிப்பாக பிராந்திய மொழிகளில்) என்ன?

(ஊ) மேற்கூறிய திட்டத்தின் கீழ் இலக்கு ஊக்குவிப்பு மற்றும் ஆதரவிற்காக தமிழகத்திற்குரிய ஏதேனும் பாரம்பரிய அல்லது அழிந்து வரும் கலை வடிவங்களை அரசு அடையாளம் கண்டுள்ளதா?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார். இதற்கு ஒன்றிய கலாச்சாரத் துறை இணை அமைச்சர் விரிவாக பதிலளித்துள்ளார்.

திருப்பத்தூர் தொகுதியில்

ரூ.31.56 லட்சத்தில் நியாயவிலைக் கடைகள்!

அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருப்பத்தூர், ஆக. 20-

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் வளர்ச்சிப் பணிகள் அனைத்துத் துறைகள் வாயிலாக மக்கள் போற்றும் வகையில் நடைபெற்று வருகின்றது.

பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலில் திருப்பத்தூர் மாவட்டம் அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றது. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கந்திலி ஒன்றியம் ஆதிசக்தி நகர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 5 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாயவிலைக் கட்டிடமும் ஆதியூர் பகுதியில் மாவட்ட பொது நிதி யிலிருந்து 13 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கட்டிடமும், MGNREGS நிதி யிலிருந்து சு.பள்ளிப்பட்டு பகுதியில் புதிய நியாய விலைக்கட்டிடமும் என 3 கட்டி முடிக்கப்பட்ட புதிய நியாய விலைக் கடைகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வட்ட வழங்கல் அலுவலர். எஸ். முரளிகிருஷ்ணன், தர்மேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள். கே.ஏ.குணசேகரன், எ.மோகன்ராஜ், ஒன்றியக் குழுத் தலைவர்.திருமதி திருமுருகன், துணைசேர்மென். ஜி.மோகன்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர்.தசரதன், ஊராட்சிமன்றத் துணைத் தலைவர்.எ.பி. பழனிவேல், ஒன்றிய நிர்வாகிகள்.குமாரசாமி, சக்திவேல், ஸ்டாலின், கார்த்தி,சரவணன் மற்றும் வார்டு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், தூய்மைப் பணியாளர்கள் என திரளாகக் கலந்து கொண்டனர்.

தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் கழக முன்னாள் அவைத் தலைவர் மறைந்த ஆ.முனுசாமி அவர்களின் மனைவியும், செம்பாக்கம் தெற்கு பகுதி மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் த.பூங்கோதையின் மாமியாருமான மு.முத்துலட்சுமி அவர்களின் திருவுருவப்படத்தை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா.எம்.எல்.ஏ. திறந்து வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.உடன் செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் இ.மனோகரன், சிட்லபாக்கம் இரா.விஜயகுமார், மு.தசரதன், க.ராமச்சந்திரன், ந.சீனிவாசன், சி.பரிமளா, சி.புஷ்பராஜ், ஆ.வீரப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

தி.மு.கழகப் பொருளாளர்

டி.ஆர்.பாலு துணைவியார் திருமதி.ரேணுகாதேவி மறைவு!

மக்களவை தலைவர் ஓம்பிர்லா தொலைபேசியில் இரங்கல் தெரிவித்தார்

புதுடெல்லி, ஆக. 20 -

தி.மு.கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகாதேவி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து, நேற்று (19.8.2025) மக்களவை தலைவர் அவர்கள் டி.ஆர்.பாலுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்னாரின் துணைவியார் மறைவுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

நெடுஞ்சாலை – பொதுப்பணித்துறையில்

பணியில் சேரும் உதவிப் பொறியாளர்களுடன் கலந்துரையாடல்!

அமைச்சர் எ.வ.வேலு அறிவுரைகள் வழங்கி உரையாற்றினார்!

சென்னை, ஆக. 20 -

சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலையக் கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (19.8.2025) புதிதாக பணியில் சேருகின்ற நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையை சேர்ந்த உதவிப் பொறியாளர்களுக்கு அவர்களுடைய பணி சிறப்பாக மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கி உரையாற்றினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்று நெடுஞ்சாலைத்துறையில் பணியில் சேருகின்ற 45 உதவிப் பொறியாளர்களையும், பொதுப்பணித்துறையில் பணியில் சேருகின்ற 165 உதவிப் பொறியாளர்களையும், அமைச்சர் , வரவேற்று பேசிய உரை வருமாறு:-

இன்று, 91 சகோதரிகள் பொறியாளர்களாகப் பதவி பெற்று பணியை தொடங்குகிறார்கள். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு" என்ற நிலைமாறியுள்ளதைநினைக்கும்போது, தந்தை பெரியார் ஞாபகம் தான் வருகிறது. தந்தை பெரியார் வெற்றி பெற்றுள்ளார் என்பதே என்னுடைய எண்ணம்.

"மக்களிடம் செல் அவர்களுடன் வாழ், அவர்களிடம் கற்றுக்கொள் அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய் - அவர்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து தொடங்கு, அவர்களிடம் இருப்பதிலிருந்து கட்டமைப்பு செய்" என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். இந்த வழியில்தான் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது அறிவியல், கணிதம் மற்றும் நடைமுறை அறிவு ஆகியவற்றை உள்ளடக்கியதுதான் பொறியியல் .

சிவில் இன்ஜினியரிங் துறையில் கட்டடங்கள் கட்டுவது, குடிநீர் வழங்குவது, சாலை வசதிகள் அமைப்பது, பாசனத்திற்கு அணைகள் கட்டிக் கால்வாய் அமைப்பது போன்ற அனைத்து பணிகளும் மேற்கொள்ள வேண்டும் முதன்முதலாக மனிதன் பொறியியல் துறை மூலம் கண்டறிந்தது சக்கரம்தான்; சக்கரம் உருவானப் பிறகு தான் மனிதனின் உழைப்பு எளிமையானது; பொது மக்களுக்கு தேவையான அனைத்து வளர்ச்சி பணிகளையும் சேவையாக செய்திட அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டதுதான் பொதுப்பணித்துறை என்றும், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்ட கல்லணை, 1000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவில் பல ஆன்மீகத் தலங்கள், தமிழர்களின் பொறியியல் திறமைக்கு சான்றாக விளங்குகிறது .

பொதுப்பணித்துறை, மராமத்துத்துறை என்ற பெயரில்தான் செயல்பட்டு வந்தது. இந்த துறையிலிருந்துதான் மின்சாரத் துறை, நெடுஞ்சாலைத் துறை வீட்டுவசதி வாரியம், குடிமை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், காவலர் வீட்டு வசதி வாரியம் போன்ற பல துறைகள் பிரிந்து சென்றுள்ளன. கடைசியாக நீர்வளத்துறை பிரிந்து சென்றுள்ளது.

1946 ஆம் ஆண்டு, நெடுஞ்சாலைத்துறை உருவாக்கப்பட்டது. பெரும்பாலான துறைகளுக்கு தாய்த் துறை பொதுப்பணித்துறை தான்.

அனைத்து அரசுக் கட்டடங்கள் சாலைகள், பாலங்கள், மேம்பாலங்கள் போன்ற அனைத்து கட்டமைப்புகளை பராமரிப்பதுடன் இயற்கைப் பேரிடர்களிடமிருந்து பாதுகாக்கும் பணியிலும், உதவிப் பொறியாளர்கள் ஈடுபட வேண்டும், பொதுக் கட்டடங்கள், பள்ளிக்கூடங்கள், திரையரங்குகள், தேர்கள் ஆகியவற்றிற்கான உறுதித் தன்மை சான்றிதழ்களை ஆய்வு செய்து வழங்க வேண்டும்.

அனைத்து உதவிப் பொறியாளர்களும் நடைமுறையில் உள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றை நன்கு படித்து, அதன் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும், கட்டடங்கள் மற்றும் பாலங்கள் கட்டும்போது, மண்பரிசோதனை, குடிநீர் பரிசோதனை, கட்டுமானப் பொருட்களின் தரம், உப்பு அதிகம் இல்லாத தண்ணீர், சிமெண்ட் மூட்டையின் எடை மற்றும் தரம், மணலின் தூய்மை ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், "தரமே நிரந்தரம்" என்றும் தரமான கட்டுமானத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

சாலைகள் தரமானதாக இருந்தால்தான், பாதுகாப்பான பயணம், பயணநேரம் குறைவதுடன் எரிபொருள் சிக்கனம், சுற்றுலா வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி போன்ற பல்வேறு நன்மைகள் கிடைக்கும்; நாட்டின் மூலதனத்தை உயர்த்தும் துறையாகப் பொதுப்பணித்துறை விளங்குகிறது. பொதுப்பணித்துறை மூலம் கட்டப்படும் கட்டடங்கள், பாலங்கள் போன்ற அனைத்தும் அரசாங்கத்தின் மூலதனம், இந்த மூலதனங்களை உருவாக்குவது நெடுஞ்சாலைத் துறையும், பொதுப் பணித்துறையும்தான் என்று எடுத்துரைத்தார்.

ஒரு டாக்டரின் சிகிச்சையில் குறைபாடு இருந்தால், அது நோயாளியின் குறைபாடாகதான் இருக்கும்; ஒரு வழக்கறிஞரின் வழக்கு தோல்வியடைந்தால், அதற்கு வழக்கறிஞர் பொறுப்பேற்கமாட்டார்; ஆனால், ஒரு இன்ஜினியரின் கட்டுமானத்தில் குறைபாடு ஏற்பட்டால் இன்ஜினியர்தான் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2030இல் தமிழ்நாட்டின் பொருளாதாரம் "ஒரு ட்ரில்லியன் டாலராக விளங்க" இலக்கு நிர்ணயித்து பணியாற்றி வருகிறார். அண்மையில் ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத்துறை வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையின்படி, 14 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19% விழுக்காடாக அதிகரித்துள்ளது. தனிநபர் வருமானம் ஓர் ஆண்டுக்கு ரூ.3.6 இலட்சம் என்ற அளவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. இதே வளர்ச்சி விகிதத்தில் நாம் முன்னேறினால், " தமிழ்நாடு முதலமைச்சர் நிர்ணயித்ததிருக்கிற ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை" எளிதாக அடைந்து விடலாம் .

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு பொதுப்பணித்துறையில் 799, நெடுஞ்சாலைத்துறையில் 1016 பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

"உழைப்பவரே உயர்ந்தவர்"என்னும் கொள்கையை மனதில் பதித்து கொண்டு, பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா. செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர்தெ.பாஸ்கரபாண்டியன், நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) தலைமைப் பொறியாளர் கு.கோ. சத்தியபிரகாஷ், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில் நுட்பம்) இரா.சந்திரசேகர், நெடுஞ் சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையை சேர்ந்த தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ஆத்துபாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளியில் உட்கட்டமைப்பு, குடிநீர் வசதி, சுகாதார வசதி, கழிவறை கட்டிடங்கள் பாராமரிப்பு குறித்தும் அரசுப்பள்ளி தேவைகள் குறித்தும் முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் ஆய்வு மேற்கொண்டார். உடன் எஸ்.ரமேஷ் மு.பாஸ்கரன் எம்.கேசவன், எஸ்.ராமஜெயம், கே.வி.நாகராஜ், மெய்யழகன், சாம்பசிவம், விஜயகுமார், ப.பரத்குமார், அஜீத், தலைமை ஆசிரியர் கதிரேசன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ. இரகுமான்கான்

ஆகஸ்ட் 20 (2020)

மாணவப் பருவத்திலேயே தேர்தல் பிரச்சாரம் செய்ததோடு, 1965ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, கல்லூரி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டைமீறி, போராட்டத்தில் ஈடுபட்டார்.

மதுரையில் கறுப்புக் கொடிப் போராட்டம் நடைபெற்றபோது, இவர்மீது அ.தி.மு.க. அரசால் பொய்வழக்குப் போடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு வேலூர், திருச்சி சிறைகளில் இருந்த இவர், இலங்கைத் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, அவருடன் சென்னை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

1977ல் தொடங்கி ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1996ல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் – 2006ல் தமிழக அரசின் சிறுசேமிப்புக் குழுத் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகத்தின் அமைப்புச் செயலாளர், தணிக்கைக்குழு உறுப்பினர், தீர்மானக்குழுச் செயலாளர், செய்தித் தொடர்பாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று கழகப் பணியாற்றிய இவருக்கு, 2012ல் தலைமைக் கழகத்தின் சார்பில் 'அண்ணா விருதினை' முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.